பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 10 | திங்கட்கிழமை | 27.10.2025 | அதிர்வு 088

## முறைகேடான சொத்துக் குவிப்பு; யாழ்ப்பாணத்தில் 11 பேருக்கு எதிரான விசாரணை தீவிரம்!




வாள்வெட்டு மற்றும் போதைப்பொருள் கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டு, சட்டவிரோதமாகவும், 06



# வெலிகம தவிசாளர் படுகொலை துப்பாக்கிதாரி உட்பட 7 பேர் கைது!

## நேற்று ஒரே நாளில் சிக்கினர்

மாத்தறை மாவட்டம், வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர படுகொலை தொடர்பில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, அனுராதபுரம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே நேற்று இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். 06

# அரசு சட்டச் சிக்கலைத் தீர்த்தால் அடுத்த முதற்காலாண்டில் தேர்தல்

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு




"மாகாண சபைத் தேர்தலில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு விரைவான நடவடிக்கைகளைமேற்கொள்வதாகஎமக்குத்தெரியவில்லை. தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் வரும் ஐந்தாம் திகதி புதன்கிழமை பௌர்ணமி தினமன்று காலையில் வவுனியாவில் நடைபெறுகின்றது.

அதற்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் – 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை – நாடாளுமன்றத்தில் இலங்கையின் நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சமர்ப்பிக்கவிருக்கும் வரவு – செலவு திட்டம் தொடர்பில் இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற குழு என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து வழிகாட்டல் முடிவை எடுப்பதுதான் இம்முறை செயற்குழுவின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் அரசமைப்பு கவுன்ஸில் விடயங்களிலும் பிற செயல்பாடுகளிலும் அரசு சார்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அரசின் வரவு – செலவுத் திட்ட விடயத்திலும் 06

# கொலைக் கலாசாரத்தை இல்லாதொழிக்க வேண்டும்

## வெலிகம தவிசாளரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு







வெலிகம பிரதேச சபையில் பொது மக்கள் தினத்தன்று இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகரவின் இல்லத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துக்கொண்டார்.

அன்னாரின் இந்தக் கொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுத்து, அவரது குடும்பத்தினருக்கு உரிய நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்கள் முன்னிலையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“லசந்த விக்கிரமசேகரவின் கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கொலைக் கலாசாரம் சமூகத்தில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட, சபைக்குத் தெரிவான ஏனைய உறுப்பினர்களால் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை இவ்வாறு படுகொலை செய்வது, நாட்டில் கொலைக் கலாசாரத்தின் மற்றொரு அங்கமாகும்.

இன்று நாட்டில் சட்டம் – ஒழுங்கு இல்லை. காட்டுச் சட்டம் மட்டுமே காணப்படுகின்றது. இதன் காரணமாக, குடிமக்களின் வாழ்க்கை சீரழிந்து போயுள்ளது. இந்தக் கொலைக் கலாசாரத்தை நாம் இல்லாதொழிக்க வேண்டும்.

தற்போதைய அரசின் பலவீனம் காரணமாக, சமூகம் பல்வேறு பிரிவினரின் பிடியில் சிக்கிப் போயுள்ளது. இது மக்களின் வாழும் உரிமை மீது விழுந்த அடியாக அமைந்து காணப்படுகின்றது.

மக்களின் வாழும் உரிமையை நாம் பாதுகாக்க வேண்டும். ஆகையால் இந்தக் கொலைகாரர்களுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். லசந்த விக்கிரமசேகரவின் கொலை குறித்து பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்க வேண்டும்.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகக் குறிப்பிட்டு பிரமாணப் பத்திரம் மூலம் பொலிஸ்மா அதிபரிடம் அவர் பாதுகாப்பு கோரிய போதிலும், உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இவ்வாறு பாதுகாப்பு வழங்காமை குறித்தும் விசாரணை நடத்த வேண்டும்.” – என்றார்.

# ஜகத் விதானவுக்கு கொலை மிரட்டல் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகரிப்பு





ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு எதிராகக் கொலை மிரட்டல்கள் இருப்பதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, அவரது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக 2 பொலிஸ் அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளனர்.

ஜகத் விதான இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த வாரத் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் பேசிய ஜகத் விதான, இந்த விவகாரத்தை விசாரிக்க பொலிஸ் மா அதிபர் எழுத்துப்பூர்வமாக களுத்துறை பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

“பொலிஸ் மா அதிபர் அனுப்பிய கடிதத்தில், வாகனத்திலிருந்து இறங்கும் தருணத்தில் என்னைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதில் சந்தேக நபரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் உள்ளது. அதில் ‘நான் சுட்டுக் கொல்லப்படுவேன்’ என எழுதப்பட்டுள்ளது,” என அவர் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அத்துடன், இந்த விடயம் குறித்து உடனடியாக விசாரிக்குமாறு நாடாளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் ஜகத் விதான இதன்போது வலியுறுத்தினார்.

# நாட்டில் 1000 இற்கும் மேற்பட்ட மருந்தாளர்களுக்கு வெற்றிடங்கள்

நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் 1000 இற்கும் மேற்பட்ட மருந்தாளர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக, அரச மருந்தாளர்கள் சங்கம் தெரி



வித்துள்ளது.

இதனால், அரச மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்கள் மருந்துகளைப் பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஐந்து வருட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்படாததே, மருந்தாளர்களின் பற்றாக்குறைக்குக் காரணம் என சுட்டிக்காட்டிப்பட்டுள்ளது.

தற்போது மருத்துவக் கல்வியை நிறைவு செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு சுகாதார அமைச்சிடம் முறையான அமைப்பு இல்லை என்பதுடன், மூன்று ஆண்டுகளாக எந்தப் பட்டதாரிகளும் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என்றும் அரசு மருந்தாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சீரற்ற வானிலையால் 31,623 பேர் பாதிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 18 மாவட்டங்களில் 7 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 623 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இதுவரையான காலப்பகுதியில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 5 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பகுதியளவில் 847 வீடுகள் சேதமடைந்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.








# போக்குவரத்துக் குற்றங்களுக்கு விதிக்கப்படும் அபராதங்களை ஒன்லைனில் செலுத்துவது குறித்து பொலிஸாருக்கு செயலமர்வு

(கி.வசந்தன்)

போக்குவரத்துப் பொலிஸாரால் விதிக்கப்படும் அபராதங்களை ஒன்லைனில் செலுத்துவது தொடர்பான பயிற்சி செயலமர்வு வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸார் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து சாரதிகளினசெயற்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபாரதங்களை அவ்விடத்திலேயே ஒன்லைன் மூலம் செலுத்தும் நடைமுறை நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதனடிப்படையில், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இதனை நடைமுறைப்படுததும் வகையில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு தெளிவூட்டல் செயலமர்வு இடம்பெற்றது.

இதில் வவுனியா– மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்புகொட்டுவ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ன விஜயமுனி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், போக்குவரத்துப் பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



















# வவுனியா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவுக்கு 5 கோடி ரூபா பெறுமதியான புதிய லேசர் இயந்திரங்கள்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கண் பிரிவுக்கு ஆர்கன் (ARGON) மற்றும் யாக் (YAG) என்ற புதிய இயந்திரங்களை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்த இயந்திரங்கள் வடமாகாணத்தில் குறிப்பாக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது இந்த இரு இயந்திரங்களும் சுமார் 48.4 மில்லியன் (161,334 டொலர்) பெறுமதி வாய்ந்தவை. இந்த இயந்திரங்கள் நோயை இனங்காணுதல் மற்றும் சிகிச்சை திறன்களை அதிகரிக்கும் திறன் வாய்ந்தவை ஆகும். குறிப்பாக இந்த இயந்திரங்கள் நீரிழிவு மற்றும் பிற நோய்களினால் கண் பார்வை இழக்கக்கூடிய நோயாளிகளை பூரணமாக குணப்படுத்துவதற்கு பெரும் பங்கு வகிக்கின்றது.

பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் வைத்தியர் த.சத்தியமூர்த்தி உரையாற்றுகையில் –

அனைத்துலக மருத்துவ நல அமைப்பானது (IMHO USA) பல வைத்தியசாலைகளில் தமது பணியினை முன்னெடுத்து வருகின்றது. காலத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்டு வருகின்றமையால் மக்கள் பெருமளவு பயனடைகின்றனர். இந்த இயந்திரங்கள் மூலம் பூரணமாக பார்வை இழப்பை தடுக்கலாம். ஆகையினால் இந்த அமைப்பினருக்கு நன்றி. – என்றார்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் நிலக்ஷன் தனது உரையில் –

இந்த இயந்திரங்கள் எமது வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றமை எமக்கு கிடைத்த வாய்ப்பு. மாதாந்தம் 200 தொடக்கம் 300 நோயாளர்கள் இந்த இயந்திரங்கள் மூலம் பயனடைவர். இதனை வழங்கிய அனைத்துலக மருத்துவ நல அமைப்பிற்கு தனது மனமார்ந்த நன்றி. – என்றார்.

கண் நோயியல் சிறப்பு ஆலோசகர் வைத்தியர் கிரிதரன் உரையாற்றுகையில் –

இவ் இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றமை நோயாளர்களின் பார்வை இழப்பை மிக வேகமாகத் தடுக்க உதவும். எதிர்காலத்தில் வைத்தியர்கள் இந்த இயந்திரங்களை சரியான முறையில் பயன்படுத்தி நோயார்களுக்கு உச்ச பயனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். – என்று குறிப்பிட்டார்.







# யாழ் பல்கலையின் துணை வேந்தர் தெரிவில் 27 பேர் வாக்களிப்பு, புள்ளியிடலுக்குத் தகுதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் அடுத்த துணை வேந்தர் தெரிவில் 27 பேர் வாக்களிப்பு மற்றும் புள்ளியிடலில் பங்குகொள்வர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணை வேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவுறுவதனால் புதிய துணை வேந்தருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதற்கமைய இடம்பெறும் ஏற்பாட்டில் புள்ளியிடலில் பல்கலைக்கழகத்தின் 12 பீடங்களின் பீடாதிபதிகளும், செனற்றால் நியமிக்கப்படும் இருவருடன் துணை வேந்தர் என 15 பேர் வாக்களிக்க முடியும்.

அதாவது பல்கலைக் கழகம் மூலம் தகுதி பெறுபவர்களின் எண்ணிக்கையை விட ஒருவர் அதிகமாக தகுதி பெறுவர். இதற்கமை பல்கலைக் கழக பேரவையில் இருந்து 16 பேர் வாக்களிக்கத் தகுதி பெறுகின்றனர். இவற்றின் அடிப்படையில் மொத்தம் 31 பேர் தகுதியடைகின்றனர்.

போட்டியிடுபவர்கள் வாக்களிக்க முடியாது என்ற நிபந்தனையின் கீழ் 4 பீடாதிபதிகள் வாக்களிக்க முடியாத நிலைமையினால் இம்முறை 27 பேரே புதிய துணை வேந்தர் தெரிவில் பங்கு கொள்வர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படி நடந்து கொள்ளக் கூடாது என்ற கரிசனை நாடாளுமன்ற குழுவிலும், கட்சியிலும் பிரதிபலித்த பின்னணியில் தான் இந்த விடயம் இப்போது கட்சித் தீர்மானமாக எடுப்பதற்காக மத்திய குழு அடுத்த வாரத்தில் கூடுகின்றது.

அரசு தலைமையைப் பகைக்காமல் இருக்கின்றமைக்காக வரவு – செலவுத் திட்ட விடயத்தில் நடுநிலை வகிப்போம் என்ற நிலைப்பாட்டை கட்சிக்குள் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று எடுக்கக் கூடும் என்ற சூழ்நிலையில்தான் விவகாரம் – பந்து – கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திற்குள் அடிக்கப்பட்டிருக்கின்றது.

இனிக் கட்சி எந்த முடிவு எடுத்தாலும் அதனைப் பின்பற்றலாம், அரசுத் தலைமையிடம் 'நான் என்ன செய்வது, கட்சி அப்படி முடிவு எடுத்து விட்டது' என்று அத் தரப்புகள் கூறிச் சமாளிக்கலாம் என்று கூறப்படுகிறது.

தாங்களே நாடாளுமன்ற குழுவில் முடிவு எடுத்து செயற்படப் போனால், ஒருபுறம் கட்சியோடு பகைக்க வேண்டும் அல்லது அரசு தலைமையோடு பகைக்க வேண்டும். இப்போது பந்து மத்திய குழுவின் களத்துக்குள். அது என்ன முடிவு எடுத்தாலும் மத்திய குழுவின் முடிவு, நான் என்ன செய்வது என்று கூறி எம்.பிக்கள் தப்பிவிடலாம்.

தவிரவும், வழமையான நிகழ்ச்சி நிரல் படி ஒழுக்காற்று நடவடிக்கை, பிற விடயங்கள் என்று மத்திய குழு கூட்டம் விறுவிறுப்பாக நடந்து முடியும் என எதிர்பார்க்கலாம்.

* * *

மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த ஆண்டில் நடக்கும் என அரசாங்கம் இப்போது சாக்குப் போக்குச் சமாளிப்புகள் கூறி வந்தாலும், அந்த எண்ணத்தில் இருந்து ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான தரப்பான ஜே.வி.பி. வெளியே வந்துவிட்டது என்று கடந்த வாரம் செய்தி வெளியாகி இருந்தது. தெற்கில் நடைபெற்று வரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு தொடர்ந்து கிடைத்து வரும் பின்னடைவும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்துவரும் வெற்றியும் மற்றும் ஆளும் தரப்பு மேற்கொண்ட கிராமிய மட்ட ஆய்வுகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவான கள நிலைமை இருப்பதை வெளிப்படுத்தி இருக்கின்றமையும் மாகாண சபைத் தேர்தலை இப்போதைக்கு நடத்துவதில்லை என்ற நிலைக்கு ஜே.வி.பித் தரப்பை தள்ளி இருப்பதாக 'மவ்ரட்ட' செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஜே.வி.பியின் உயர்மட்டக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இரண்டு விதமான தீர்மானங்களில் ஒன்றைப் பின்பற்ற முடிவெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஒன்றில், மாகாண சபை முறைமையை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அல்லது மாகாண சபை தேர்தல்களை காலவரையறை இல்லாமல் தள்ளிப் போடுவது.

நிலைமையைப் பார்த்து இதில் ஒன்றை அரசுத் தலைமை எடுக்கலாமென ஜே.வி.பி. மேல் மட்டம் ஆளும் தரப்புக்கு கோடி கட்டி இருப்பதாக அறிய வருகிறது.

எப்படிப் பார்த்தாலும் மாகாண சபை தேர்தல் இப்போதைக்கு நடப்பதற்கான சாத்தியம் இல்லவே இல்லை என்பதுதான் நிலைமையாகும்.

## அரசு சட்டச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவறுகளினால் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்படவில்லை. நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட புதிய தேர்தல் முறைமையால் ஏற்பட்ட சட்டச் சிக்கலினால் மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பதில் சிக்கல் ஏற்பட்டது.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானம் கோரப்பட்ட போது நாடாளுமன்றத்தின் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று உயர்நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர்களினால் மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக அம்சங்களுக்கு முரணானது என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து இதுவரை காலமும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசியல் தரப்பினர் தற்போது விசேட கரிசனை கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் சட்டம் ஒன்று இல்லை. அடுத்தாண்டு முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் இந்த ஆண்டுக்குள் மாகாண சபை சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும்." – என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறைகேடாகவும் சொத்துச் சேர்த்த சந்தேகத்தில் 11 பேருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ்.ஜெயமஹா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"போதைப்பொருள் கடத்தல், வன்முறைகள், வட்டிக்கு விடுதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சொத்துச் சேர்த்தவர்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் அண்மைக்காலமாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 11 பேர் இந்த விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுக்குச் சொந்தமான சொகுசுக் கார்கள், ஆடம்பர விடுதிகள், இறால் பண்ணைகள், உள்ளூரிலும் வெளிமாவட்டங்களிலும் பல்பொருள் அங்காடிகள் என்பன உள்ளன. அந்தச் சொத்துக்கள் தொடர்பில் முழுமையான புலன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை சட்டவிரோதமாகப் பெறப்பட்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அந்தச் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்படும்." – என்றார்.

## வெலிகம தவிசாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கிதாரி என்று சந்தேகிக்கப்படும் நபர் கொழும்பு – மகரகம – நாவின்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

முன்னதாக, துப்பாக்கிதாரியின் மனைவியும் துப்பாக்கிதாரியை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றவரும் அவர்கள் மறைந்திருக்க உதவிய நபருமாக மூவர் அனுராதபுரம் – கெக்கிராவை பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது துப்பாக்கிதாரி தப்பிச் சென்றிருந்தார் என்று கூறப்பட்டது. அத்துடன், அங்கு கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், 12 இலட்சம் ரூபா பணம், ஐஸ் போதைப்பொருள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, இந்தக் கொலை தொடர்பில் மாத்தறை மாவட்டத்திலும் நேற்று பிற்பகல் இருவர் கைது செய்யப்பட்டனர்.

தவிர, இந்தக் கொலைக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் ஓட்டோ சாரதி ஒருவர் காலி – ஹியாரே பகுதியில் வைத்து நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

# நவீன கைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்குத் தடை!

## அமைச்சர் சரோஜா தெரிவிப்பு

பாடசாலை மாணவர்களில் 12 வயதுக் குட்பட்டோர் நவீன கையடக்கத் தொலை பேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் உரையாற் றிய அமைச்சர், 12 வயதுக்குக் குறை வான எந்தவொரு பிள்ளையும் நவீன கையடக்கத் தொலைபேசிகளை வைத் திருக்கவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறு திப்படுத்த அரசு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப் பிடுகையில்,

“மாணவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது பொறுத்தமற்றது. பாசத்துடன் அறி வுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். சுய ஒழுக்கத்தையும் கட்டுப் பாடுகளையும் அவர்களுக்கு பழக்கப் படுத்த வேண்டும். சுய கட்டுப்பாடுடைய சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.



போதைப்பொருள் பாவனை தொடர் பிலும் மாணவர்களுக்குச் சுய ஒழுக்கம் கற்பிக்கப்பட வேண்டும். கையடக்கத் தொலைபேசி என்பது ஒரு விடயமா கும். அதில் குறுகிய காணொளிகள் மிக ஆபத்தானவை. பிள்ளைகளில் மூளை இயங்கும் வேகத்தை அவை கட்டுப் படுத்துகின்றன.

எனவேதான் அவற்றிலில் இருந்து பிள்ளைகளை வேறுபடுத்துமாறு பெற் றோரிடம் வலியுறுத்துகின்றோம். ஆஸ் திரேலியா, சீனா போன்ற நாடுகள் சிறு வர்கள் கைத்தொலைபேசி பாவிப்பதைத் தடை செய்துள்ளன. அந்தவகையில் பாடசாலை மாணவர்கள் தொலைபேசி பாவிப்பதைத் தடை செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் தடை மூலம், அதிகப்படியான திரைக் காட்சியில் இருந்தும், தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கத் தில் இருந்தும் பிள்ளைகளைப் பாது காத்து, ஆரோக்கியமான வளர்ச்சியையும் சமூகத் தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே அரசின் நோக்கம்.” – என்றார்.

# தெற்கில் காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவேந்தி சீதுவையில் இன்று நிகழ்வு

## ஜனாதிபதி, நீதி அமைச்சரிடம் மகஜர்களும் கையளிப்பு

1989 இல் தெற்கில் ஜே.வி.பி. எழுச்சி யின் போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை சீதுவை – ரத்தொலுகமவில் நடைபெறவிருப்ப துடன் அதனைத் தொடர்ந்து ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோரிடம் மகஜர்களும் கையளிக் கப்படவுள்ளன.

1989 ஆம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) எழுச்சியின் போது அதன் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டனர். இந்தச் சம்பவங்களுக்கு மத்தி யில் 1989 ஆம் ஆண்டு சுதந்திர வர்த் தக வலய ஊழியரும் தொழிற்சங்கவாதி யுமான எச்.எம்.ரஞ்சித் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகிய இருவர் கொல்லப்பட்ட தன் பின்னர், அவர்களது உடல்கள் சீதுவை – ரத்தொலுகம பகுதியில் மீட் கப்பட்டன.

அதனையடுத்து அவர்களை நினைவு கூரும் வகையில் சீதுவை – ரத்தொலு



கம சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத் தூபி, பின்னாளில் தெற்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவு கூருவதற்கான நினைவுத் தூபியாக மாற்றமடைந்தது.

அதன்படி தெற்கில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கி வரும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத் தின் ஏற்பாட்டில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் பங் கேற்புடன் வருடாந்தம் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி இந்தத் தூபிக்கு அருகில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெறும்.

அதற்கமைய இன்று காலை 10.00 – 11.15 மணி வரை சீதுவை – ரத்தொலுகம வில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர் நினைவுத் தூபிக்கு முன்பாக நினைவுகூரல் நிகழ்வொன்று ஏற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் காணா மல்போனோர் குடும்ப ஒன்றியத்தால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதி லும், அந்தக் கடிதத்துக்கு எவ்வித பதிலும் கிடைக்காததன் காரணமாக, தமது கோரிக் கைகளை உள்ளடக்கி இன்று ஜனாதி பதியிடம் மகஜரைக் கையளிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அந்த ஒன்றியத் தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி இன்று நண்பகல் 12.00 – 1.30 மணி வரை நீதி அமைச்சுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தியதன் பின்னர் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடமும், அத னைத் தொடர்ந்து பிற்பகல் 2.00 – 3.00 மணி வரை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதன் பின்னர் ஜனாதிபதி யிடமும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்படும் என்று பிரிட்டோ பெர்னாண்டோ மேலும் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாத்தியமேயற்ற பேச்சு!

சகல குடிமக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதே தமது அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு இலங்கை மன்றத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுக்கையிலேயே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்திய பிரதமர், "எமது அரசாங்கத்தின் நோக்கம், இனத்துவம், மதம், மொழி அல்லது இருப்பிடம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாத சகல குடிமகனின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதே ஆகும்" எனத் தெரிவித்தார்.

நல்ல கருத்துத்தான். உயர்ந்த நிலைப்பாடுதான். ஆனால் இது ஒன்றும் புதியதல்ல. ஆண்டாண்டு காலமாக இலங்கையை ஆண்டு வந்த பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப் போக்குக் கொண்ட தலைவர்கள் வழமையாக வாய்ப்பேச்சுக்கு உபதேசம் செய்யும் தத்துவம்தான் இது. 'தர்மிஷ்டர்' ஜே.ஆர்.ஜெயவர்த்தனவில் இருந்து எல்லோரும் உருத்திராட்சப் பூனைகளாக கூறிவந்த விடயம்தான்.

அவர்களின் பலர் அல்லது பெரும்பாலும் அனைவரும் ஒருபுறம் இப்படி உயர்வான சிந்தனையை பேசினாலும் கரவாகவும் கொள்கை ரீதியிலும் பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்க அடக்குமுறைப் போக்கை செயலில் எப்போதும் வெளிப்படுத்தியவர்கள்தான்.

இப்போது ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினர் தங்களின் காலாதிகால பேரினவாத மேலாதிக்க சிந்தனை வெறியைக் கரவாகப் புதைத்து, மறைத்துக்கொண்டு, இத்தகைய தத்துவங்களை பேசக்கூடும். அவர்களினின்றும் வேறுபட்டவராக பிரதமர் ஹரிணி அமரசூரிய இருக்கலாம். உண்மையில் இனவாதம் கடந்து, ஐக்கிய இலங்கை ஒன்றை உருவாக்கும் எண்ணம் அவரது அடி மனதில் இருந்து வந்ததாகக் கூட இருக்கலாம்.

ஆனால் இந்தத் தீவின் தனித் தேசிய இனக் குழுமமான தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூர அநீதிகளுக்கு - யுத்தக் குற்றங்களுக்கு - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு - மனித உரிமை மீறல்களுக்கு - நீதி காணாமல், உண்மை கண்டறியப்பட்டு அம்பலப்படுத்தப்படாமல், பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படாமல், ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவது என்று பிரலாபிப்பது வெறும் பம்மாத்து நாடகமாகவே அமையும். இதனை இப்போது சகல குடிமக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பப் போகிறார் எனச் சூளுரைக்கும் பிரதமர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்களையும், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களையும், மோசமான மனித உரிமை மீறல்களையும் மூடி மறைத்து, அவற்றுக்கு நீதி காணாமல் புறமொதுக்கி, அந்த வன்மமும் ஆதங்கமும், ஆற்றாமையும் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கையில், அதன் மீது அமைதியான - நல்லிணக்கமான - ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவது என்பது எரிமலையின் உச்சியில் அமைதிக் கட்டடம் கட்டுகின்ற 'முட்டாள்தனமான' விடயமாகத்தான் இருக்கும் என்பதை பிரதமர் ஹரிணி அமரசூரிய உணர்ந்து கொள்வது நல்லது.




# இந்தியா முழுவதும் வாக்காளர் பட்டியல் திருத்தம் இன்று அறிவிப்பை வெளியிடும் தேர்தல் ஆணையம்

நாடு தழுவிய அளவில் வாக்காளர் பட்டியலை திருத்தும் செயல்முறை குறித்த அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் இன்று வெளியிட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிஹாரில் சட்டப்பேரவைத் தேர்தல் திகதி அறிவிப்பதற்கு முன்பாக அம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் இந்திய தேர்தல் ஆணையம் திருத்தம் மேற்கொண்டது. சிறப்பு தீவிர திருத்தம் (SIR) என்ற பெயரிலான இந்த செயல்முறை மூலம் போலி வாக்காளர்கள், இரட்டை வாக்குரிமை கொண்டிருந்தவர்கள், மரணமடைந்தவர்கள், வெளிநாடுகளில் இருந்து ஊடுருவியவர்கள் ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டு வாக்காளர் பட்டியல் தூய்மைப்படுத்தப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்த செயல்முறையில் சுமார் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்த நடவடிக்கையின் மூலம் தேர்தல் ஆணையம் ஆளும் பா.ஜ.கவுக்கு துணை போவதாக அவை குற்றம் சாட்டின. தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு தடை விதிக்கக் கோரி காங்கிரஸ், தி.மு.க உள்பட பல்வேறு தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

எனினும், சிறப்பு தீவிர திருத்தத்துக்கு தடையோ, இடைக்கால தடையோ வழங்க மறுத்துவிட்ட உச்ச நீதிமன்றம், சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் தொடர்வதற்கு தடையில்லை என அறிவித்தது.

இந்நிலையில், இந்திய தலைமை தேர்தல் ஆணையர் உள்பட தேர்தல் ஆணையர்கள் இன்று மாலை செய்தியாளர்களைச் சந்திக்க உள்ளனர் எனவும் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை நாடு தழுவிய அளவில் மேற்கொள்வது குறித்த அறிவிப்பை அவர்கள் வெளியிட வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்கள் உட்பட 10 முதல் 15 மாநிலங்களில் முதல்கட்ட சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படலாம் என தெரிகிறது.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா, அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, இந்த மாநிலங்களில் சிறப்பு தீவிர திருத்தம் தற்போது தொடங்கப்படலாம் என தெரிகிறது.

கடந்த 24 ஆம் திகதி வழக்கு ஒன்றில் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜரான இந்திய தேர்தல் ஆணைய வழக்கறிஞர், தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தம் விரைவில் மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மத்திய, மாநில அரசுகள் நதிகளை புனரமைக்க வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை



“நதிகள் புனரமைப்பு மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புள்ள பிரச்சினை. ஆகவே மத்திய, மாநில அரசுகள் முழு முனைப்புடன் நதிகள் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழகத்தில் தற்போது பருவமழைகள் முறையாக பெய்து வருகின்றன. இதன் காரணமாக பல அணைகள் நிரம்பி உபரிநீர் நதிகளில் வெளியேற்றப்படுகின்றன. வெளியேற்றப்படுகின்ற உபரிநீரை முழுமையாக விளைநிலங்களுக்கு சென்று சேமிக்க போதிய வழிகள் இன்றி பெரும்பாலான உபரி நீர் நதிகள் வழியாக கடலில் சென்று கலக்கின்றன.

இதற்கு நதிகளில் முழுமையான புனரமைப்பு மேற்கொள்ளாததும். முறையான திட்டமிடலும் இல்லாததே காரணம். நதிகளில் முறையான புனரமைப்பு இருக்கும் பட்சத்தில் இந்த நதிகளில் வருகின்ற நீர் கால்வாய்கள் மூலம் நீர்பாசன பகுதிகளில் முறையாக சேமிக்கப்படும். இந்த நீரை வறட்சி காலத்தில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து வேளாண்மையை பெருக்க முடியும். குடிநீருக்கும் வழிவகுக்கும், நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

ஆனால் தற்போது பல இடங்களில் நதிகளுக்கும், கால்வாய்களுக்கும் இடையே முறையான சரியான புனரமைப்பு இல்லாத காரணத்தினால் அதிகப்படியாக நதிகளில் நீர் தேக்கி வைக்க முடியாமல் நதியில் வருகின்ற நீர் கடலில் சென்று கலக்கும் சூழ்நிலை நிலவுகிறது.

தமிழக அரசு தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாத்தல் மற்றும் நதிகள் சீரமைப்பு கழகம் என்ற அமைப்பை உருவாக்கி இந்த அமைப்பின் மூலம் சென்னையில் உள்ள கூவம், அடையாறு போன்ற நதிகளை புனரமைப்பு பணிகளை மேற்கொள்கின்றன. இதற்கு மத்திய அரசு உதவிகள் செய்து வருகிறது. இந்த அமைப்பைக் கொண்டு சென்னை நதிகளை தாண்டி தமிழகத்தில் உள்ள அனைத்து நதிகளையும் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நதிகளை புனரமைக்க நவீன மயமாக்கல் முறையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது மட்டும் இன்றி தமிழகத்தில் வறட்சி பகுதிகளுக்கு நதிநீரைக் கொண்டு செல்ல கால்வாய்கள் மூலம் நதிகள் உடன் இணைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு உள்ளது

## கமலா ஹாரிஸ் தெரிவிப்பு




அமெரிக்க வரலாற்றில் பெண் ஜனாதிபதி நிச்சயம் இடம்பிடிப்பார் என தான் எதிர்பார்ப்பதாக ஜனநாயக கட்சியின் முன்னாள் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் கூறியுள்ளார்.

அண்மையில் சர்வதேச ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்தார். அதில் இது குறித்து பேசியுள்ளார்.

கடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப்பை எதிர்த்து கமலா ஹாரிஸ் போட்டியிட்டார். தேர்தலில் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அப்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் பாதியில் விலகிய நிலையில் கமலா ஹாரிஸ் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சர்வதேச ஊடக நிறுவனத்துக்கு கமலா ஹாரிஸ் வழங்கிய பேட்டியில்,

“நிச்சயம் எனது பேர பிள்ளைகள் வெள்ளை மாளிகையில் பெண் ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருப்பதை தங்கள் வாழ்நாளில் பார்ப்பார்கள் என நம்புகிறேன். அது நானாக கூட இருக்கலாம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. அரசியலில் எனக்கு எதிர்காலம் உள்ளதாக நம்புகிறேன்.

நான் கருத்து கணிப்புகளை கருத்தில் கொள்வது இல்லை. அப்படி இருந்திருந்தால் நான் தேர்தலில் போட்டியிட்டு இருக்க மாட்டேன், இங்கு அமர்ந்து பேசி இருக்கவும் மாட்டேன். தன் மீதான விமர்சனங்களை ஜனாதிபதி ட்ரம்ப் பால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை.” என்று தெரிவித்துள்ளார்.



# ரஷ்யா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இராணுவம் கடும் பதிலடி கொடுக்கும்

## புடின் நிர்வாகம் எச்சரிக்கை

ரஷ்யா மீது தீவிரமாக தாக்குதல் நடத்தப்பட்டால், தங்கள் இராணுவம் கடுமையாக பதிலடி கொடுக்கும் என புடின் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமித்ரிபெஸ்கோவ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி புடின் குறிப்பிட்டுள்ளது போன்று, பதிலடி மிகத் தீவிரமாக இருக்கும் என்று பெஸ்கோவ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா அல்லது வேறு எந்த வெளிநாட்டு சக்தியின் அழுத்தத்திற்கும் ரஷ்யா ஒருபோதும் அடிபணியாது என்று ஜனாதிபதி புடின் வியாழக்கிழமை தெரிவித்திருந்தார்.

மட்டுமின்றி, ரஷ்யாவை மோசமாக பாதிக்கும் எந்தவொரு இராணுவத் தாக்குதலுக்கும் தகுந்த பதிலடி அளிக்கப்படும் என்றும் புடின் எச்சரித்திருந்தார்.

இதனிடையே, அணுசக்தியால் இயங்கும் பியூரெவெஸ்ட்னிக் குரூஸ் ஏவுகணையை ரஷ்யா வெற்றிகரமாக சோதித்ததாக புடின் ஞாயிறன்று தெரிவித்துள்ளார்.

பியூரெவெஸ்ட்னிக் குரூஸ் ஏவுகணையானது உலகின் எந்த வலுவான வான் பாதுகாப்பையும் முறியடிக்கும் திறன் கொண்டது என புடின் விளக்கமளித்துள்ளார்.

முன்னதாக, உக்ரைன் போர் தொடர்பில் ரஷ்யாவிற்கு அழுத்தமளிக்கும் வகையில், தீவிர தாக்குதலுக்கான ஆயுதங்களையும் ஒப்புதலையும் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவிடம் கோரியிருந்தது.

இதில் அமெரிக்கா தயக்கம் காட்டிய நிலையில், ஐரோப்பிய நாடுகள் தீவிர ஆலோசனைகளுக்கு பின்னர் முடிவெடுக்க உக்ரைனுக்கு உறுதி அளித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே ரஷ்யா தற்போது கடும் மிரட்டல் விடுத்துள்ளது.









# உக்ரைன் தலைநகரில் ரஷ்யா வான் தாக்குதல்

## 3 பேர் உயிரிழப்பு

உக்ரைன் தலைநகரில் ரஷ்யா நடத்திய வான்வெளி தாக்குதலில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு தொடங்கிய ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போர், 3 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்த போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் தலைநகர் கீவ் மீது ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யா பெரும் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில், ட்ரோன்கள் ஏராளமான அடுக்குமாடி குடியிருப்புகளில் விழுந்து, அங்கு தீ விபத்து ஏற்பட்டது. ஹெலிக்கொப்டர்கள் மூலம் தீ அணைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் காயமடைந்த மக்களை தீயணைப்பு வீரர்கள் மீட்டு மருத்துவமனைகளில் அனுமதித்தனர்.

இந்த தாக்குதலில் தற்போது வரை 3 பேர் உயிரிழந்துள்ளனர். 6 குழந்தைகள் உட்பட 27 பேர் காயமடைந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.









# கந்த சஷ்டி கவச பாராயணம்

**- எஸ்.கீதபொன்கலன் -**

கந்தசஷ்டி கவசத்தில் கவசம் என்றால் நம்மைத் தீமைகளிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் காப்பாற்றக் கூடிய ஒரு பாதுகாப்பு என்று கூறலாம். இது முருக னின் அருளைப் பெறுவதற்காக இயற்றப்பட்டது. கந்த சஷ்டி கவசத்தை இயற்றிய ஸ்ரீதேவராய ஸ்வாமிகள் அதீத முருக பக்தர். இவர் தமது ஒவ்வொரு மூச்சிலும் முருகனையே சுவாசித்தார்.

இந்த சஷ்டி கவசத்தை தினம் இரு வேளையி லும் அதாவது காலையிலும், மாலையிலும் ஓத முரு கப்பெருமானே காட்சி தருவான் என்பது ஐதீகம்.

ஜாதகத்தில் ஆறாம் இடம் ரோகம், கடன்,விரோதம், சத்ரு ஆகியவைகளைக் குறிக்கும். எனவே நாம் அந்த முருகன் திருவடியை தொழும் கந்தசஷ்டி கவசத்தை இடைவிடாது பாராயணம்செய்து வந்தால்மேலே சொன்ன ஒரு கெடுதலும் நம்மை அண்டாது. வீட்டில் கடன்,வியாதி, சத்ரு பயம் இல்லை என்ற நிலை ஏற்படும்.

கந்தன் எழுந்தருளி வரும் அழகே அழகு, பாதம் இரண்டில் பண்மணிச் சலங்கை கீதம் பாட கிண்கி ணியாட, மயில் மேல் அமர்ந்து வேலன் ஆடி வரும் அழகை என்னவென்பது! இந்திரனும் மற்றும் எட்டு திசைகளிலும் வீற்றிருக்கும் தேவர்களும் அந்த வரவை போற்றுகின்றார்கள்.

கந்தன் வந்து விட்டான்,இப்போது என்னைக் காக்க வேண்டும், பன்னிரண்டு விழிகளும் பன்னிரெண்டு ஆயுதத்துடன் வந்து என்னைக் காக்க வேண்டும். அவன் அழகை வர்ணிக்கும் போது, பரமேஸ்வரி பெற்ற மகனே முருகா, உன் நெற்றியில் இருக்கும் திருநீற்று அழகும், நீண்ட புருவமும், பவளச் செவ்வாயும், காதில் அசைந்தாடும் குண்டலமும், அழகிய மார்பில் தங்க நகைகளும், பதக்கங்களும், நவரத்தின மாலை அசைய உன் வயிறும், அதில் பட்டு வஸ்திரமும் சுடர் ஒளி விட்டு வீச, மயில் மேலேறி வந்து கேட்டவர் களுக்கு எல்லாம் வரம் தரும் முருகா,என்றெல்லாம் முருகனை ஸ்ரீதேவராயர் வர்ணிக்கிறார்.

வதனத்திற்கு அழகு வேல், நெற்றிக்குப் புனிதவேல், கண்ணிற்குக் கதிர்வேல், நாசிகளுக்கு நல்வேல், செவிகளுக்கு வேலவர் வேல், பற்களுக்கு முனை வேல், செப்பிய நாவிற்கு செவ்வேல், கன்னத்திற்கு கதிர்வேல், கழுத்திற்கு இனிய வேல், மார்பிற்கு ரத்தின வடிவேல்,இளமுலை மார்புக்கு திருவேல்,தோள்களுக்கு வடிவேல், பிடரிகளுக்கு பெருவேல், அழகு முதுகிற்கு அருள்வேல், வயிற்றுக்கு வெற்றிவேல், சின்ன இடைக்கு செவ்வேல், நாணகயிற்றை நால்வேல், பிட்டம் இரண்டும் பெருவேல், கணைக்காலுக்கு கதிர் வேல், ஐந்து விரல்களுக்கு அருள்வேல், கைகளுக்கு கருணை வேல், நாபிக்கமலம் நல்வேல்,முப்பால் நாடியை முனை வேல்,எப்போதும் என்னை எதிர் வேல்,பகலில் வஜ்ரவேல், இரவில் அனைய வேல் என்ற பல்வேறு விதமான வேல்கள் நம்மைக் காக் கின்றன என்று சஷ்டி கவசம் கூறுகின்றது.

அடுத்து எந்தெந்த வகை பயங்களில் இருந்து முருகன் நம்மை காக்க வேண்டும் என்று விளக்கப் பட்டுள்ளது. அவையான பில்லி, சூன்யம், பெரும் பகை, வல்ல பூதம், பேய்கள், அடங்காமுனி, கொள்ளிவாய்ப் பிசாசு, குறளைப் பேய்கள், பிரும்ம ராட்சசன், இரிசி காட்டேரி, இவைகள் அனைத்தும் முருகன் பெயர் சொன் னாலே ஓடி ஒளிந்து விடும் என்கிறார் ஸ்ரீதேவராயர்.

புலியும் நரியும், எலியும் கரடியும், தேளும், பாம் பும்,செய்யான், பூரான் ஆகியவைகளால் ஏற்படும் அபாயங்களும்,விஷங்களும சஷ்டி கவச ஓசையி லேயே அகன்று விடும் என்றும் அவர் கூறுகின்றார்.

மேலும் வலிப்பு,சுரம்,சுளுக்கு,ஒற்றைத் தலைவலி, வாதம்,பைத்தியம்,பித்தம், சூலை,குடைச்சல்,நரம்புச் சிலந்தி,குடல் புண்,பக்கப்பிளவை போன்ற வியாதிகள் கந்த சஷ்டி கவசத்தைப் படித்தால் உடனே சரியாகி விடும் என்றும்,மேலும் இதைப் படித்தால் வறுமை ஓடிவிடும், நவகிரகங்களும் நமக்குத் துணை இருப் பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து சஷ்டி கவசத்தை பக்தி சிரத்தையுடன் பாடி வருபவர்களுக்கு அவர்களின் சத்ருக்கள் மனம் மாறி விடுவார்கள் என்றும்,முகத்தில் தெய்வீக ஒளி வீசும் என்றும் அப்பாடலில் கூறப்பட்டுள்ளது. எனவே, நாள்தோறும் கந்த சஷ்டி கவசம் படியுங்கள். வேல னைப் போற்றி வணங்குங்கள்.நீங்கள் பட்ட கஷ்டம் எல்லாம் விலகி ஓடிவிடும்.

முதலும் முடிவும் முருகன் என்பதை உணர்பவர் வாழ்வில்,முடிவில்லா பேரின்பம் கிட்டும்.


## அப்பன் முருகன் அருளுவான் எமக்கு !
## (6ஆம் நாள் )

ஒருமுகம் எங்களை உருகிட வைக்கும்
மறுமுகம் எங்களை மயங்கிடச் செய்யும்
அறுமுகம் இணைந்து ஆனந்தம் கொடுக்கும்
அப்பன் முருகன் அருளுவான் எமக்கு

வேலன் என்றால் வினைகள் ஓடும்
காலனும் அருகே வந்திட மாட்டான்
ஆலமாய் இருக்கும் அனைத்தையும் போக்குவான்
அழகன் முருகன் அடியைப் பரவுவோம்
கனியும் அவனே சுவையும் அவனே
காயும் அவனே மலரும் அவனே
அனைத்தும் ஆகி இருப்பவன் முருகன்
அவனை நினைத்தால் ஆனந்தம் பெருகும் !



மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ் மொழிக்
கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன்,
ஆஸ்திரேலியா.




# மழையுடனான வானிலை நாளை முதல் குறையும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



பலத்த மழையுடனான வானிலை காரணமாக களு மற்றும் கிங் கங்கைகளின் நீர்மட்டம் தொடர்ந்தும் வெள்ள அபாய மட்டத்தில் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஆறுகளை அண்டிய தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தெதுரு ஓயா, இராஜாங்கனை உள்ளிட்ட 15 பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் தொடர்ந்தும் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எச்.எம்.பீ.எஸ்.டீ.ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டமண்சரிவுஅபாயஎச்சரிக்கைதொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு திசையில் வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள குறைந்த அழுத்த பிரதேசம், இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் சூறாவளியாக வலுவடைந்து இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாளைக்கு பின்னர் மழையுடனான வானிலை குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.




# இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான படகு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்!

வடகிழக்கு பருவமழை ஆரம்பித்துள்ளதால் இந்தியாவின் நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையேயான படகு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் படகு சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை முன்னறிவிப்பால் நேற்று ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை திட்டமிடப்பட்டிருந்த பயணங்களை இரத்துச் செய்வதாக சுபம் படகு நிறுவனம் அறிவித்துள்ளது.

நவம்பர் முதல் வருடாந்திர சேவைகளை இடைநிறுத்துவதற்கு முன்னர், 28 ஆம் திகதி வரை இயக்க நிறுவனம் திட்டமிட்டிருந்தது.

"படகை உலர்த்தவும், புதுச்சேரியில் வழக்கமான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் இந்த இடைவேளையைப் பயன்படுத்துவோம். படகின் இருக்கைத் திறனை 150 இலிருந்து 186 ஆக அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளோம்." – என்று சுபம் படகு நிறுவனத்தின் தலைவர் சுந்தர்ராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் வரும் வியாழன் ஆரம்பம்

## அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவிப்பு

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம், "தேச ஒருமைப்பாடு – தேசிய இயக்கம்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளதோடு அங்குரார்ப்பண நிகழ்வு காலை 10 மணிக்குச் சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த தேசிய சபை, மாவட்ட சபைகள், பிராந்திய சபைகள் மற்றும் பொதுப் பாதுகாப்புக் குழுக்கள் ஆகிய நான்கு முக்கிய துறைகள் ஒன்றிணைந்து ஆதரவளிக்கும் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒன்றிணையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸாரின் தரவுகளின் பிரகாரம், கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஆயிரத்து 482 கிலோ 820 கிராம் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, 59 ஆயிரத்து 243 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 2 ஆயிரத்து 542 கிலோ 454 கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 67 ஆயிரத்து 762 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 582 கிலோ 136 கிராம் ஹஷிஷ் பறிமுதல் செய்யப்பட்டு ஆயிரத்து 444 கைதுகளும் இடம்பெற்றுள்ளன.

14 ஆயிரத்து 434 கிலோ 468 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு 59 ஆயிரத்து 482 கைதுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 32 கிலோ 642 கிராம் கொகைன் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 86 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 39, ஆயிரத்து 617 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு அவற்றை விநியோகித்த 2 ஆயிரத்து 921 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் தடுப்பு – இலங்கை நாட்டின் இளைய தலைமுறையைக் காக்கும் போராட்டம்




- எஸ்.கீதபொன்கலன் -

இலங்கையில் போதைப் பொருள் தொடர்பாக கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் 59,000 பேர் கைதாகியுள்ளனர் என்பது சமூகத்தை அதிர்ச்சி யடையச் செய்த செய்தியாகும். இதை விட திரு கோணமலையில் இம்மாதம் 23 ஆம் திகதி 6 கிலோ மெண்டி போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட பின்னணியில் மாவட்டம் போதைப் பொருள் கடத் தல்காரர்களால் குறிவைக்கப்பட்டுள்ளமை தீவிர மாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.இது ஒரு குற்றப்பிரச்சினை மட்டுமல்ல, மாறாக இது நமது இளைய தலைமுறையின் எதிர் காலத்தை அழிக்கும் சமூகப் பெரும் பிணி யாகும்.

போதைப் பொருள் குற்றங்களின் பிரிவுகளை நோக்கினால் இந்தப் பிரச்சினை இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

முதல் பிரிவினர் பயன்படுத்துவோர் மற்றும் சிறு வியாபாரிகள்.

இவர்கள் பெரும்பாலும் சமூகத்தின் அடித் தட்டில் வாழ்பவர்கள்.

கல்வி அறிவின்மை,வறுமை, வேலை வாய்ப்பு இன்மை போன்ற காரணங்களால் இவர்கள் போதைப் பொருளின் அடிமைகளாகவும், சிறு விற்பனையாளராகவும் மாறுகின்றனர். இவர் களே அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். ஆனால் இவர்கள் "பெரும் குற்றவாளிகள்" அல்லர். சமூகத்தின் பாதிக்கப்பட்ட தரப்பினரே.

இரண்டாம் பிரிவினர் பெரிய வியாபாரிகள் மற்றும் வெளிநாட்டு வலையமைப்புகளை கொண்டவர்கள்.

இந்தக் குழுவில் வெளிநாட்டு உற்பத்தியாளர் கள், இறக்குமதியாளர்கள், பெரிய விநி யோக வட்டங்கள் அடங்குகின்றன.

இவர்கள் அரசியல்,காவல் துறை மற்றும் அரசுத் துறை ஆதரவோடு செயற்படுபவர்கள்.

இதனால் இவர்கள் கைதாகுவது மிக அரிது. இவர்கள் மிகப்பலம் பொருந்தியவர்கள். பணக் காரர்கள் மற்றும் ஆயுத குழுவினர். அத்துடன் அதிகார சக்தி கொண்டவர்கள்.

உண்மையில் இந்த பெரிய வியாபாரிகளாலேயே சிறு வியாபாரிகள் காலத்திற்கு காலம் திட்டமிட்ட வகையில் காவல் துறையிடம் காட்டிக் கொடுக் கப்பட்டு கைதாக்கப்படுகின்றனர்.

இத்தகைய நிலையில் அடுத்து நாம் நோக்க வேண்டியது போதைப் பொருளும் நேர்மை யான அதிகாரிகளின் நிலையும் பற்றி.

முன்னைய அரசாங்கத்தில் சில நேர்மையான காவல் அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் போதை வலையமைப்பை முறியடிக்க முயன்றபோது அரசியல் அழுத்தத்தால் ஒதுக்கப்பட்டனர்.

அவர்களின் கடமையுணர்வு தண்டிக்கப்பட்டது. இதுவே போதைக்குற்றங்களும் குற்றவாளிகளும் அதிகரித்தமைக்கான முக்கிய காரணம் ஆகும்.

இந்த நிலையில் தற்போதைய அரசின் நட வடிக்கைகள் புதிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

நேர்மையான அதிகாரிகள் தற்போது ஊக்கு விக்கப்படுகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல்கள் முறியடிக்கப் படுகின்றன.

மூல வலையமைப்புகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

இது சட்டத்தின் உயிர்ப்பை மீண்டும் துளிர்க் கச் செய்து,சமூகத்தில் நம்பிக்கை மற்றும் நீதியை மீண்டும் நிலைப்படுத்தி உள்ளது.

நீதித்துறை மற்றும் சட்டத்தின் பங்கு பற்றி அடுத்து நாம் நோக்கும் போது,

நீதித்துறை இன்று புத்துயிர் பெற்றிருக்கிறது. போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

இது சமூகத்துக்கு ஒரு தெளிவான செய்தியைக் கொடுக்கிறது. அது யாதெனில்

"சட்டத்தில் இருந்து யாரும் விலக்கு பெற முடியாது, உண்மை மற்றும் நேர்மை வெற்றி பெறும்" என்பதே.

இந்நிலையில் இளம் தலைமுறையின ரதும், நாட்டினதும் எதிர்காலம் குறித்து நாம் நோக்குவோமாயின், இளைய தலைமுறைதான் நாட்டின் இதயம். அவர்களின் ஆற்றல் நாட்டின்

தொடர்ச்சி ▼

# போதைப் பொருள் தடுப்பு - இலங்கை நாட்டின் இளைய தலைமுறையைக் காக்கும் போராட்டம்



**தொடர்ச்சி ▲**

அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். போதைப் பொருள் அவர்கள் வாழ்வை அழிக்கக்கூடிய மிகப்பெரிய எதிரி. அதனால் கல்வி நிலையங்கள், பெற்றோர், சமூக அமைப்புகள், அரசு ஆகியவை இணைந்து போதை எதிர்ப்பு கல்வியை வலுப்படுத்த வேண்டும்.

இனி தீர்வுக்கான வழிமுறைகள் பற்றி நோக்குவோமாயின், முதலில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு. அதாவது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஊடகங்கள் வழியாக போதைப் பொருளின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை தொடர்ச்சியாக மேற்கொள்ளல். மேலும் சட்டம் மற்றும் தண்டனை என்பவற்றின் மூலம் விற்பனையாளர்களை மட்டுமல்ல, ஆதரவாளர்களையும் விசாரித்தல், கைது செய்தல், தண்டனை வழங்கல் அத்துடன் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு என்ற வகையில் போதைப் பொருள் அடிமைகளுக்கு மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சை வழங்கல். இதே வேளை சமகாலத்தில் சமூக பங்குபற்றல் மூலம் இளைஞர்களை விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளிலும்,தொழில் பயிற்சிகளிலும் ஈடுபடுத்துதல்.

இறுதியாக போதைப் பொருள் தொடர்பான செயற்பாடுகள் ஒரு சிறிய குற்றம் அல்ல..அது ஒரு சமூகப்பிணி அதனை ஒழிப்பது ஒரு சட்டப்பணி மட்டுமல்ல. அது ஒரு தேசிய கடமை என்பதை உணர்ந்து,அனைத்து தரப்பினரும் இணைந்து நீதியுடனும் நேர்மையுடனும் செயல்படும் போது மட்டுமே நாம் நமது இளைய தலைமுறையை காப்பாற்றி, போதையற்ற இலங்கையை உருவாக்க முடியும்.



# பத்தேகம பிரதே சபையின் உப தலைவர் மீது தாக்குதல்

பத்தேகம பிரதேச சபையின் உப தலைவர் சமன் சி லியனகே தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர் ஒருவரால் நேற்றுமுன்தினம் மாலை இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் தனது மனைவியுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, பத்தேகம, கொடகந்த பகுதியில் வீதியை மறித்து அவர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உப தலைவர் தற்போது காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதல் தொடர்பில் பொத்தல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொத்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# ஒளி நாடாவில் உறையும் வரலாறு

**இன்று உலக ஒளி-ஒலி பாரம்பரிய நாள் (World Day for Audio visual Heritage). அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



**ஜிந்துஜா விஜயகுமார்**
**(ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)**

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 27ஆம் திகதி உலக ஒளி-ஒலி பாரம்பரிய தினம் (World Day for Audiovisual Heritage) அனுசரிக்கப்படுகின்றது. இந்நாளானது நமது கூட்டு நினைவகத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை உலகிற்கு உணர்த்துகிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக, உலக நாடுகள் தங்களின் ஒளி – ஒலி (Audiovisual) பதிவுகள், திரைப்படங்கள், ஒலிப்பதிவுகள் மற்றும் வீடியோ ஆவணங்கள் போன்ற பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாப்பதற்கான முக்கியத்துவத்தை உணர்த்தும் ஓர் உலகளாவிய தளமாகவும் இந்நாள் செயல்பட்டு வருகிறது.

இந்த நாளை யுனெஸ்கோ (UNESCO), ஓடியோவிஷுவல் காப்பக சங்கங்களின் ஒருங்கிணைப்பு கவுன்சிலுடன் (CCAAA) இணைந்து 2005 ஆம் ஆண்டில் நிறுவியது. அதன் நோக்கம் – காலத்தால் சிதைவுறும் அல்லது தொழில்நுட்ப முன்னேற்றத்தால் பயன்பாட்டிலிருந்து நீங்கும் ஒலி – ஒளி ஆவணங்களைப் பாதுகாக்கும் பணியில் சமூகங்களையும் அரசுகளையும் இணைத்துச் செயல்படச் செய்வதாகும்.

தொழில்நுட்பத்தின் மோகத்தினால் நமது பாரம்பரிய தொன்மங்களை மறந்து வாழும் இந்த சமூகம் இயந்திரத் தன்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் நமது திரைப்படங்கள், வானொலிப் பதிவுகள், இசை நாடாக்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்ற ஒளி – ஒலி வடிவங்களிலான பதிவுகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இந்த நாள், 2025ஆம் ஆண்டு தனது 20வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

மேலும் இந் நாளானது, கடந்த இருபது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நினைவு கூரும் தருணமாகவும், எதிர்காலத்திற்கான திட்டமிடலுக்கான வாய்ப்பாகவும் அமைகிறது. இவ்வாண்டுக்கான அதிகாரப்பூர்வ கருப்பொருள் அறிவிக்கப்படாதபோதிலும், “20வது ஆண்டு நிறைவு – நமது கூட்டு நினைவகத்தைப் பாதுகாக்கும் உறுதி” என்ற சிந்தனை மையமாகக் கொண்டே உலகளாவிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இது வெறும் கொண்டாட்டமல்ல கடந்த 20 ஆண்டுகளில் நாம் ஒலி – ஒளி சார்ந்த பாரம்பரிய பொருள்களைப் பாதுகாப்பதில் அடைந்த வெற்றிகளையும், இன்னும் நாம் கடக்க வேண்டிய தூரத்தையும் எடைபோடும் ஒரு முக்கியமான தருணமாகும்.

திரைப்படங்கள், ஒலிப்பதிவுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆவணப்படங்கள் போன்றவை நமது வரலாற்றின் உயிர்ப்புடன் கூடிய சாட்சிகளாகும். ஆனால் அவற்றில் பலவும் பழைய வடிவங்களில் சேமிக்கப்பட்டுள்ளமையால், அவை காலப்போக்கில் சேதமடையும் அபாயம் மிகுந்துள்ளதோடு இவை அழிவின் விளிம்பில் உள்ளன. இதனால் அவற்றை டிஜிட்டல் வடிவில் மாற்றி பாதுகாப்பது காலத்தின் தேவையாகின்றது.

பாரம்பரிய ஒளி–ஒலி பதிவுகள், வரலாற்றின் உணர்வுபூர்வமான மற்றும் நேரடி சாட்சியங்களை நமக்கு வழங்குகின்றன. ஒரு புகைப்படம் தரும் தகவலைவிட, ஒரு குரல் பதிவு அல்லது அசையும் படப்பதிவு காலத்தின் உயிர்ப்பை நமக்குள் உணர்வுடன் கடத்தும் ஆற்றல் கொண்டது.

### எதிர்கொள்ளும் சவால்கள்

காலப்போக்கில் இந்த ஒலி – ஒளி நாடாக்கள் ஊடகச் சிதைவுக்கு உட்படுகின்றன. இந்த பழைய ஃபிலிம் நாடாக்கள் மற்றும் ஒலி நாடாக்கள் காலப்போக்கில் வேதியியல் மாற்றங்களால் சிதைவடைகின்றன. மற்றும் ஏஊசு அல்லது கிராமபோன் போன்ற கருவிகள் மறைந்துபோகும் நிலையில், அவற்றை வாசிப்பதற்கான கருவிகள் இல்லாமல் போகின்றன.

பாதுகாக்கப்படும் பதிவுகளை ஆய்வாளர்கள் மற்றும் பொது மக்கள் எளிதில் அணுகுவதற்கான வழிமுறைகள் இல்லாமையினால் இவற்றை நாடும் மக்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது.

இவ்வாறான சவால்களை களைந்து இந்தப் பதிவுகளின் தொடர்ச்சியான பாதுகாப்பு மற்றும் அவை பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுவது ஆகியவற்றை உறுதி செய்வதே இந்த நாளின் முக்கிய நோக்கமாகும்.

தொடர்ச்சி ▼




# ஒளி நாடாவில் உறையும் வரலாறு

தொடர்ச்சி ▲

### பாதுகாப்பும் அணுகலும்

நவீன தொழில்நுட்பம் ஆவணங்களை நீண்டகாலமாகப் பாதுகாக்க உதவினாலும், அந்த ஆவணங்களுக்கு பொதுமக்கள் அணுகுமுறை கிடைப்பதிலும் சமநிலையைப் பேணுவது முக்கியம். பாதுகாப்பு, காப்புரிமை, சேமிப்பு செலவு மற்றும் தொழில்நுட்ப பராமரிப்பு ஆகியவை இன்னும் பல காப்பகங்களுக்கு சவாலாக உள்ளன.

அதே நேரத்தில், கல்வி, கலாச்சாரம், சமூக ஆராய்ச்சி போன்ற துறைகளில் ஆடியோவி/வல் பதிவுகள் அளிக்கும் பங்களிப்பு அளப்பரியது. அவை ஒருசமூகம், ஒரு தலைமுறை, ஒரு நாட்டின் அடையாளத்தை உருவாக்கும் முக்கிய ஆதாரங்களாகும்.

### சமூக பங்களிப்பு அவசியம்

இந்த ஆண்டு நிறைவு விழா, அரசுகள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து நமது ஒளி – ஒலி பாரம்பரியத்தை காக்கும் பொறுப்பு அனைவருக்கும் இருப்பதை நினைவூட்டுகிறது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், திரைப்பட காட்சிகள், காப்பக திறந்தநாள் விழாக்கள், உரையாடல் அமர்வுகள் போன்றவை இந்த நாளை முன்னிட்டு பல இடங்களில் நடைபெறுகின்றன.


2025 ஆம் ஆண்டின் உலக ஆடியோவிஷுவல் பாரம்பரிய தினம், கடந்த இருபது ஆண்டுகளாக நாம் நினைவுகளை எவ்வாறு பாதுகாத்தோம் என்பதைப் பிரதிபலிக்கும் நாளாக அமைவதோடு அதேசமயம், எதிர்கால தலைமுறைகள் நமது குரலையும் காட்சிகளையும் அனுபவிக்கச் செய்யும் பொறுப்பை உறுதிப்படுத்தும் நாளாகவும் இது விளங்குகிறது.

இந்த நாளின் மைய நோக்கம், இந்தக் கலைப் பொக்கிஷங்களை டிஜிட்டல் மயமாக்குவதும், நவீன சேமிப்புத் தீர்வுகளைப் பயன்படுத்துவதும் மற்றும் புதிய தலைமுறைக்குக் காப்பகக் கலையைக் கற்றுக் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுவதும் ஆகும்.

இந்த ஒலி – ஒளிப் பதிவுகள் ஒரு நாட்டின், சமூகத்தின், குடும்பத்தின் கூட்டு நினைவகமாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக, 1950களில் பதிவு செய்யப்பட்ட ஒரு குடும்பத் திருமண வீடியோ அல்லது ஒரு விடுதலைப் போராட்டம் குறித்த வானொலி அறிவிப்பு, வெறுமனே கடந்த கால நிகழ்வுகள் அல்ல் அவை அந்தச் சமூகத்தின் உணர்ச்சிபூர்வமான அனுபவங்களின் அசைக்க முடியாத சான்றுகள். இந்த ஆவணங்களைப் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே நாம் நமது வரலாற்றையும் அடையாளத்தையும் வருங்காலத் தலைமுறைக்கு நம்பகத்தன்மையுடன் கடத்த முடியும்.

2025ஆம் ஆண்டில் உலக ஓடியோவிஷுவல் பாரம்பரிய தினத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நாம், ஒவ்வொரு தனிநபரும் இந்தப் பதிவுகளைப் பாதுகாக்கும் பணியில் பங்களித்து, அவை என்றென்றும் நிலைத்திருக்க உறுதிபூணுவோம். நமது நினைவுகளைப் பாதுகாப்பது என்பது நமது அடையாளத்தைப் பாதுகாப்பது ஆகும். ஆகையால், நமது வரலாறு ஒளியாகவும் ஒலியாகவும் என்றும் உயிர்ப்புடன் இருக்கட்டும்.

# கந்தபுராண கலாசாரத்தைக் கருத்தில் வைப்போம்!






மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

ஆசியாக்கண்டம் பரந்தது விரிந்தது. ஆசியாக் கண்டத்தில் காணப்படும் கலாசாரத்தின் அடிநாதமாக மெய்யியல் இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றார்கள். இந்த மெய்யியல் பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி இருப்பதை வரலாற்றால் அறிய முடிகிறது. சோதனைகளையும் வேதனைகளையும் எதிர் கொண்டாலும் மெய்யியலை மட்டும் இழந்துவிட விரும்பாத நிலையில் சூழலுக்கு ஏற்ப ஒரு கலாசாரத்தை ஏற்படுத்தி அதனை வளர்ப்பதற்கும் அதனை வாழ்வுடன் இணைத்து நிற்பதற்கும் முயற்சிகள் நடைபெற்றமையையும், அதற்கு தலைமை ஏற்பதற்கு தகுதியானவர் வந்த நிலையையும் காணமுடிகிறது. இந்த வகையில் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் – தமிழையும் சமயஇலக்கியத்தையும் சேர்த்துக் கொண்டு வீறு பெற்று ஒரு தனித்துவமான கலாசாரம் எழுந்தது. அதனை யாவரும் போற்றினர்.கண்டவர் வியப்புற்றனர். அப்படி யாவரையும் வியக்கும் வண்ணம் செய்ததுதான் முகிழ்த்த ‘கந்தபுராண கலாசாரம்’ ஆகும்.

ஆசியநாட்டில் இந்தியாவின் நிலை மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். சமயம், இலக்கியம், ஆன்மீகம், கலைகள் போன்றவை இந்தியாவின் சொத்துக்களாகும். ஞானிகள் பலரை இந்தியா தந்திருக்கிறது. வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் யாவும் பொக்கிஷங்களாக அமைந்திருக்கின்றன. சமணம், பௌத்தம், சைவம், வைஷ்ணவம் என்று மதங்கள் பலவும், அவை சம்பந்தமான கருத்து மோதல்கள், பலவித பிணக்குகள் யாவும் இந்தியாவில் இருந்தமையை வரலாற்றால் அறிகிறோம். ஆனால் இப்படியொரு நிலை ஈழத்தில் காணப்படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருக்கவே இல்லை என்பதும் முக்கியமாகும். யாழ்ப்பாணமும் அங்கு வாழ்ந்த தமிழ்மக்களும் இந்தியத் தொடர்பை விட்டுவிடவில்லை. அதே வேளை இந்தியாபோல் இருந்திடவும் நினைக்கவில்லை. இந்திய சிந்தனைகளை உள்வாங்கி அவற்றை வைத்துக் கொண்டு, தமக்கென ஒரு பண்பாட்டை உருவாக்கிட முனைந்தமை முக்கியத்துவம் மிக்கதெனலாம்.

தமிழ் இலக்கிய நூல்களும் சமய இலக்கிய நூல்களும் இந்தியாவின் பொக்கிஷங்கள் என்பது மிகவும் பெருமைதான். ஆனால் ஈழத்துத் தமிழர்கள் தமிழ் சமய இலக்கியங்களில் காட்டும் ஈடுபாடும் உறுதிப்பாடும் அங்கு காணப்படும் நிலை சற்று தளப்பமாய் இருக்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். அதற்கு அங்கு காணப்படும் சமூகநிலையும், அரசியல் நிலையும் காரணமாகக் கூட இருக்கலாம். என்றாலும் இந்தியாவின் அங்கீகாரம் குறிப்பாக தமிழகத்தின் அங்கீகாரம் பெரிய அங்கீகாரமாக அன்றும் தேவைப்பட்டது. இன்றும் அந்த நிலை தொடர்கிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்து எனலாம்.

சமணத்தாலோ, பௌத்தத்தாலோ , வைஷ்ணவத்தாலோ, ஆரியத்தாலோ, திராவிடத்தாலோ, ஈழத்தவர்கள் – குறிப்பாக யாழ்ப்பாணத்து சமூகம் – தாக்கமுறும் நிலை ஏற்படவில்லை. அதற்கான சூழலும் அங்கு காணப்படவில்லை. ஆனால் இவை யாவும் இந்தியாவில் நிறைந்தே இருந்தன. தமிழகத்தில் இவற்றின் தாக்கம் மிகுந்து காணப்பட்டது என்பதும் கருத்திருத்த வேண்டியது முக்கியமாகும். ஆனால் எங்கிருந்தோ வந்துநின்ற எங்கள் பண்பாட்டுக்கே பொருத்தமில்லா கூட்டத்தால் ஏற்பட்ட வினையால் சமூகத்தில் வேண்டத் தகாத விளைவுகள் வந்து நின்றன. இந்த வினையை வெட்டி எறிந்து, தமிழ் சமயப் பண்பாட்டைக் காப்பாற்றி, அப்பண்பாட்டை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயமே, ஈழத்தில் குறிப்பாக யாழ் மண்ணுக்குத் தேவையாய் இருந்தது. அந்த நிலையில் ஒருவர் வந்து நின்றார். அவர்தான் நல்லை நகர் தந்த ஆறுமுகநாவலர். அவரால் உருவாக்கப்பட்டதுதான் ‘கந்த புராண கலாசாரம்’.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்னும் அன்னியர் வருகையினால் யாழ்ப்பாணத்தின் கோலமே மாறியது. சைவசமயம் பதறியது. கோவில்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. கிறீத்தவம் தலை விரித்து நின்றது. மதம் பரப்பும் போதகர்கள் மதம்பிடித்து நின்றார்கள். சைவமும் தமிழும் தமிழர்தம் வாழ்வும் ஊசலாடியபடியே காணப்பட்டன. அங்கு வாழ்ந்தவர்கள் தங்களின் சமய நடவடிக்கைகளை செய்ய முடியா நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். காலங்காலமாய் கடைப்பிடித்து வந்த பண்பாடு அவர்களின் கண் முன்னாலேயே சிதறுண்டு போகும் நிலையே காணப்பட்டது.


சைவத்தைக் கடைப்பிடித்து, தமிழ் சமய இலக்கியங்கியங்களை உயிரென்று எண்ணி வாழ்ந்தவர்கள் அன்னியச் சூறாவளியினால் அவதிக்கு ஆள்படும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். கோவில்கள் தோறும் கந்தபுராணம் படிக்கப்பட்டது. கந்தனுக்குரிய விரதங்களை மக்கள் மிகவும் பக்குவமாக அனுட்டித்து வந்தார்கள். தமிழும் சமயமும் மலர்ந்தும் விரிந்தும் நல்லதொரு பண்பாடு ஒளிவிட்டு இருந்தது. ஆனால் அவை யாவுமே கேள்விக்குறியாகியதால் மக்கள் திசையறியா கலமாக இருந்தார்கள்.

சமணத்தை நன்கு கற்று அதன் தலைமைப் பீடத்தில் இருந்தவர்தான் நாவுக்கரசர். அதே நாவுக்கரசர்தான் சைவத்தைக் காத்திட உழவாரப் படையினைக் கையில் ஏந்தி சமணத்தை எதிர்த்து சைவத்தின் காவலனாக வந்து நின்றார். இதன் காரணத்தால் திருநாவுக்கரசு நாயனாராக சைவத்தமிழ் உலகில் இன்றுவரை போற்றுதலுக்கு உரியவராக நிற்கிறார். அப்பர் பெருமான் என்று சைவர்கள் அவரை அழைப்பதில் அகநிறைவு எய்துகிறார்கள் எனலாம்.

அப்பரைப் போல ஒருவராக ஆறுமுக நாவலரும்

தொடர்ச்சி ▼

# கந்தபுராண கலாசாரத்தைக் கருத்தில் வைப்போம்!




தொடர்ச்சி ▲

அக்கால யாழ்ப்பாண நிலையில் சைவத்தைக் காத்திட வந்து நிற்கிறார். நாவலர் ஆங்கிலத்தில் கற்றார். கிறீத்தவ சூழலில் அவர் கற்றல் நிகழ்ந்தது. கிறீத்தவத்தை நன்கு தெரிந்தவர் ஆகிறார். அதனால் கிறீத்தவ வேதாகம நூலான பைபிளை தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றலையும் பெற்று நிற்கிறார். முழுக்க முழுக்க கிறீத்தவ சூழலில் நின்ற ஆறுமுகநாவலர் மனம் முழுவதும் சைவமே நிறைந்து நின்றது. இதனால் சைவத்தை காத்திட சைவ தமிழ் இலக்கியங்கியங்களை காத்திட நாவலர் வீறுகொண்டு எழுகின்றார். அந்த எழுச்சி தந்த கலாசாரமே யாவராலும் 'கந்தபு ராண கலாசாரம்' என்று போற்றுதலுக்கு உரியதாக விளங்கிறது எனலாம்.

தமிழ் இலக்கியங்களை, தமிழ் இலக்கணத்தை, சைவ இலக்கியங்களை ஆறாத காதலுடன் ஐயமகற்றியே ஆறுமுக நாவலர் கற்றார். ஆறுமுகம் என்னும் பெயர்கொண்டவர் தமிழ்நாடு சென்று ஆற்றிய சொற்பெருக்கை கண்ணுற்ற திருவாவடுதுறை ஆதீனமே 'நாவலர்' என்னும் பட்டத்தை அளித்து ஆறு முகத்தை அங்கீகாரம் செய்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து ஆறுமுகமாக சென்றவர் 'ஆறுமுகநாவலர்' என்னும் கௌரவத்துடன் திரும்புகின்றார். தமிழகத்தின் அங்கீகாரத்துடன் அவரின் பணிகள் ஆரம்பிக்கப் படுவதும் மனங்கொள்ளத் தக்கதாகும். அங்கீகாரம் பெற்றாலும் யாழ்ப்பாணத்தில் அவரினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஈழம் முழுவதற்குமே பெரும் பயனை வழங்கின என்பதை மறுத்துவிட முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவிலுள்ள ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளை நாவலர் காலம் என்று குறிப்பிடலாம். பொதுவாக இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டிலும் சிறப்பாக ஈழத்திலும் நிலவிய சூழ்நிலையே ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்தது எனலாம். பல இலட்சம் தமிழ்ச் சைவர்கள் ஆறுமுக நாவலரின் காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் தமிழ்ச் சைவர்களில் ஒருவரே ஆறுமுகநாவலர் ஆகிவிட முடிந்தது. இங்குதான் நவலரின் பெருமை புலப்பட்டு நிற்கிறது எனலாம்.

பல்லவர், பாண்டியர், சோழர், ஆரிய சக்கரவர்த்திகளால் சைவமும் தமிழும் பாராட்டி வளர்க்கப்பட் டன. பாண்டியர் வீழ்ச்சியின் பின்பு சைவத் தமிழ் மன்னரால் தலையெடுக்க முடியாமற் போய் விட்டது. பதினான்காம் நூற்றாண்டின் பின் சைவத் தமிழர் பிறர் தயவில் வாழக் கற்றுக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டு முற்பகுதிவரை யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழர் ஆட்சி இடம் பெற்றிருந்தது. தமிழகத்தில் ஒரு சாராரே சைவராக இருந்தார்கள். அவர்களுள் இன்னொரு சாரார் வைஷ்ணவத்தை தழுவியிருந்தார்கள். சைவசித்தாம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் வேதாந்தமும் செல்வாக்குடன் அங்கு விளங்கியது என்பதும் நோக்கத் தக்கதாகும். இப்படியான ஒரு சூழல் காணப்பட்டாலும் – அங்கிருந்த நிலை பாரம்பரிய தமிழ்க் கலாசாரத்தை விட்டுவிடாமல் அதனுடன் பிணைந்தே இருந்த காரணத்தால் – ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவத் தமிழ் இயக்கம் போன்ற ஒன்று இந்தியாவில் தோன்றவில்லை என்பது மனமிருத்த வேண்டிய முக்கிய விடயமாகும். சமரச சன்மார்க்க இயக்கங்கள் உருவாவதற்கே இந்தியச் சூழ்நிலை வழிவகுத்தது எனலாம்.

இந்தியாவின் செல்வாக்கு ஈழத்தில் காணப்பட்டாலும் ஈழத்தின் சமூகநிலை இந்தியா போன்று இல்லாத காரணத்தால் இங்கு உருவான பண்பாடும் வித்தியாசமானதாகவே அமையும் நிலை ஏற்பட்டது எனலாம். புராணங்களில் கந்தபுராணத்தைப் போற்றும் மனப்பாங்கு தமிழ் நாட்டை விட யாழ்ப்பாணத்தில் நிறைந்தே இருந்தது எனலாம். கந்தபுராணத்தைச் சொந்த புராணமாக இங்குள்ள சைவர்கள் போற்றினார்கள். கோவில்கள் தோறும் கந்தபுராணத்தைப் படித்து அதன் விளக்கத்தை விவரமாக எடுத்துரைக்கும் ஒரு பணி தெய்வீகப் பணியாக யாழ்ப்பாண மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.


போர்த்துக்கேயர் , ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையால் யாழ்ப்பாணத்தின் நிலையே தலைகீழானது. கோவில்கள் இடிக்கப்பட்டன. மதமாற்றம் கட்டாயம் ஆக்கப்பட்டது. கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. பாரம்பரிய பண்பாடு கேலிக்கு உரியதாக்கப்பட்டது. சுதேசம் தொலைந்து போகும் நிலை உருவானது. அன்னியரின் கெடுபிடியால் பலர் மதம் மாற்றப்பட்டனர். பணத்துக்கும், பட்டத்துக்கும், பதவிக்கும், உயர் அந்தஸ்த்துக்கும் என்று பலர் மதத்தை – பண்பாட்டை – துறக்கும் நிலை உருவாக்கப்பட்டது. பயத்தின் காரணமாயும் இந்த வலைக்குள் பலர் மாட்டுப்பட்டார்கள். களப்பிரர் காலம் போல ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஓர் இருண்ட காலமே நிலவியது எனலாம்.

தமிழ்ப் படிக்க முடியாத நிலை. சைவத்தை கைக்கொள்ள முடியாத நிலை. திருமுறைகளை ஓத முடியாத நிலை. விரதங்களை அனுட்டிக்க முடியாத நிலை. சைவர்களாய், தமிழர்களாய் வாழுவதே மிகவும் கஷ்டமாய் ஆகிவிட்ட நிலை. 'வேதநெறி தளைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க ஒரு குழந்தை புனித வாய் மலர்ந்து அழுதது', 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று ஒரு குரல் எழுந்து நின்றது. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் அவ்வேளை ஒரு குரல் எழுந்தது. அந்தக்குரல்தான் ஆறுமுக நாவலர் குரலாகும்.

நாயன்மார்கள் ஊர்கள்தோறும் சென்று பக்திப் பரவசம் நல்கும் பாடல்களைப் பாடி மக்களிடம் சமய நல்லுணர்வையும் நல்வாழ்க்கை முறைகளையும் சேர்ப்பித்தார்கள். அவர்களின் அர்ப்பணிப்பால் மக்களிடம் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டது. புத்துணர்ச்சி உருவானது. பக்தியென்னும் இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. தமிழும் வளர்ந்தது. சமயமும் வளர்ந்தது. சமூகத்திலும் நல்லதொரு மாற்றமும் விளைந்தது. கலங்கிய சமூகம், தடுமாறிய சமூகம், நிதானம் அடைந்தது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்னும் நம்பிக்கையும் பிறந்தது. நற்றமிழை நாவாரப் பேச வேண்டும். நற்றமிழால் இறைவனை

தொடர்ச்சி ▼

# கந்தபுராண கலாசாரத்தைக் கருத்தில் வைப்போம்!




தொடர்ச்சி ▲

துதிக்க வேண்டும். நற்றமிழும் சமயமும் இரண்டு கண்கள் என்னும் உணர்வும் எல்லோர் மனதிலும் ஊற்றெடுக்க வைக்கப் பட்டது.

நாயன்மார்கள் காலம் பாடல்கள் கோலோச்சிய காலம். அதனால் எதைச் சொல்வதாக இருந்தாலும் அதற்கு வழி பாடல் என்னும் ஊடகம்தான். ஆனால் நாவலர் காலம் அப்படியானது அன்று. அதனால் நாவலர் அவர்கள் தனது சமய தமிழ் சமூகப் பணிகளுக்கு உரைநடையினையே உறுதுணை ஆக்கினார். பேச்சு, எழுத்து, விளக்கம் யாவும் நாவலரின் உத்வேகமான உரைநடை போக்கில் வெளிவந்து நின்றன.

அன்று யாழ்ப்பாணம் இருந்த சூழலில் ஆறுமுகநாவலர் மட்டும் உருவாகி இருக்காவிட்டால் இன்று ஈழத்தில் சைவமே இருந்திருக்காது. தமிழும் அதுசார்ந்த பண்பாடும், தமிழ் சைவ இலக்கியங்களும் காணாமலேயே போயிருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்க ளெங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தன் அறிவெங்கே அறை.

– இந்தப்பாடலே இதற்குத் தக்க சான்றாகி நிற்கிறது அல்லவா!

இந்தியாவில் தோன்றிய முனிவர்கள் கண்ட பழைமையான கலாசாரம் பண்பாடு சில நெருக்கடிகளால் தெற்கு நோக்கி நகரத்தொடங்கியது. அக்கலாசாரம் சற்று தங்கி இருப்பதற்கு ஒரு இடம் கிடைத்ததென றால் அது யாழ்ப்பாணம் என்பதுதான் பொருத்தமாகும். அதற்குக் காரணம் நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட கந்தபுராண கலாசாரம் என்றேதான் சொல்லலாம்.

" ல்இந்தக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைப் பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம் முக்காலும் சத்தியம்." என்பது நாவலர் பெருமானின் கருத்தாகும்.

நாட்டுக்கு வருகின்ற இடையூறுகளினின்றும் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்திட உதவியது. பாதுகாத்தது. பாதுகாத்து வைக்கின்றது. கந்த புராணம் ஒரு கற்பதரு , அது வேண்டுவார் வேண்டுவதை எந்தக் காலத்திலும் ஈவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. விலங்கு நிலையிலிருக்கும் மனிதனை மனதனாக்கி மனிதர்களுக்கு மேலே தேவர்களுக்கும் அப்பாலே வழி நடப்பதற்கும் வழி செய்வது கந்தபுராணம்.

இப்படிப்பட்ட கந்தபுராணம் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சைவாலயத்திலும் மடாலயங்களிலும் வருடந் தோறும் விதிப்படி படித்துப் பொருள் சொல்லப் பட்டுவந்தது. வருடத்தில் மூன்று மாதங்கள் கந்தபுராண காலமாக இருக்கும். ஆண்களும் பெண்களும் காப்புக்கட்டி விரதம் இருந்து கந்தபுராணத்தைக் கேட்பார்கள். ஊர்கள் தோறும் இருக்கும் கோவில்களில் எல்லாம் இதனைக் கண்டு கொள்ளக் கூடிய ஒரு நிலை காணப் பட்டது. சைவசமயத்தில் துறைபோனவர்கள், தமிழில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்கள், சிவ தீட்சை பெற்றவர்கள், ஆசாரசீலர்கள், கந்தபுராணத்தை ஒருவர் இராகத்துடன் படிக்க இன்னொருவர் அதற்குரிய விளக்கங்களை சொல்ல அங்குள்ளவர்கள் பெரும் பயனைப் பெற்று வந்தார்கள். இதனால் சமயம் வளர்ந்தது. தமிழும் வளர்ந்தது. ஒழுக்கம், கட்டுப்பாடு, உயர்சிந்தனை, பக்தி, அறம், நேர்மை என்று இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத பண்புகள் மக்களின் உள்ளத்தில் பதியும் நிலை உருவானது என்பது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயமெனலாம். இப்படி மிகவும் சிறந்து விளங்கிய பண்பாட்டுக்கு பெரும் இடையூறாக வந்து நின்றதுதான் அன்னியர் என்னும் சூறாவளி ஆகும்.

அன்னியரின் வருகையால் யாழ்ப்பாணத்தின் நிலையே தலைகீழானது. மக்களின் கோலங்கள் அலங்கோலங்கள் ஆகின. இந்த வேளை இறைவனின் அனுக்கிரகத்தால் ஆறுமுகநாவலர் ஆறுதலாய்த் தேறுதலாய் அங்கு வந்து நின்றார். ஏற்கனவே கந்த புராணம் என்பது பரம்பரையில் ஊறிய காரணத் தால் அந்தப் பரம்பரையில் வந்துநின்ற நாவலரின் இரத்தத்திலும் ஊறியே காணப் பட்டது. கந்தபுராணம் யாழ்ப்பாணத்தவர்களை மீண்டும் காப்பாற்றும் வல்லமை மிக்கது என்று ஆறுமுகநாவலர் எண்ணினார். ஆகவே சொந்தப் புராணமாக கந்தபுராணத்தையே நாவலர் பெருமான் துணையாக்கி அதன் வழியில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைக் காத்து உயிர்ப்புறச் செய்யும் பணியில் உழைக்கத் தொடங்கினார். அவரின் உழைப்பினால் யாழ்ப்பாணத்தின் பண்பாடு காப்பாற்றப்பட்டது. அந்தப் பண்பாட்டினைக் காத்திட அவர் கையாண்ட வழிமுறைகளினால் முகிழ்த்து வந்ததுதான் – 'கந்தபுராண கலாசாரம்' ஆகும்.

"இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளும் சைவ சமயத்தில் கூடப் பற்றில்லாதவர்கள் பலரேயாகவும், இவ் யாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவருள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றற்றவர் அரியர் ஆதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னை எனிற் கூறுவதும் :

"எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்கினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்த முதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்கியம் கந்தபுராணத்திலுள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களை கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர்வேயாம்,

"இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யும் கோயில்கள் மிக அரியன் இத் தேசத்திலே அது செய்யப்படாக் (யாழ்ப்பாணத்தில்) கோயில் இல்லை. இந்தியாவிலே வித்துவான்கள் சைவ சமய குருமார் முதலியோர்களுள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தவர் சிலரே் இத்தேசத்திலோ (யாழ்ப்பாணத் திலோ) பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்"

தொடர்ச்சி ▼

# கந்தபுராண கலாசாரத்தைக் கருத்தில் வைப்போம்!

தொடர்ச்சி ▲

என்று நாவலர் பெருமான் அவர்கள் யாழ்ப்பாணச் சமய நிலை என்னும் நூல் வாயிலாக வெளிப்படுத்தி இருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். நாவலுருடைய காலத்தில் கந்தபுராணப் படிப்பு மிகவும் உச்ச நிலையை அடைந்தது.

பெரியபுராணத்தைக் கோவில்கள் தோறும் சென்று பிரசங்கம் செய்தவர் நாவலர் பெருமான் அவர்கள். பெரியபுராணத்தை யாவரும் படிக்க வேண்டும் என்னும் பேரவாவினால் அதனை வசனநடையில் ஆக்கியும் அளித்திருக்கிறார்.

ஆனால் அவர் கையிலெடுத்தது கந்தபுராணத்தையே ஆகும். அதற்கு என்ன காரணம் என்பதும் ஆராயப் படவேண்டியதே. தேவர்களைஅசுரர்கள் துன்புறுத்தி பல தொல்லைகளைக் கொடுத்தார்கள். தேவர்களின் கோட்பாடுகளைச் சீரழித்தார்கள். இந்த நிலையை அன்னியர் வருகையுடனும் அவர்களின் அட்டூழியத்துடனும் நாவலர் பெருமான் ஒப்பிட்டிருக்கலாம். தேவர்களைக் காத்து ஆணவநிலை நின்ற அசுரர்களை அழித்து அறத்தை நிலை நாட்டிட கந்தப் பெருமான் அவதாரம் செய்கிறார் என்பதையே கந்த புராணம் காட்டி நிற்பதால் அன்னிய அசுரர்களை அகற்றி சைவமென்னும் தர்மத்தையும் உயிரன்ன தமிழையும் பண்பாட்டையும் காத்திட கந்த புராணம் நிச்சயம் உற்ற துணையாகும் என்ற நம்பிக்கையே கந்தபுராணத்தைக் கையில் எடுப்பதற்கும் அதன் வழி ஒரு புதுக் கலாசாரம் உருவாதவற்கும் நாவலர் பெருமானின் எண்ணமாகக் கூட இருந்திருக்கலாம் அல்லவா?

கந்தபுராண கலாசாரம் என்பது ஆறுமுக நாவலருடன் நின்றுவிடவில்லை. அவரின் மரபைக் கைக்கொள்ளும் பாரிய பரம்பரையினையே உருவாக்கி விட்டது எனலாம். ஆறுமுக நாவலரின் பணிகள் பன்முகப்பட்டன. பழைய நூல்களைப் பதிப்பித்தமை. காலத்துக்கு ஏற்ப தமிழ் இலக்கியங்களை குறிப்பாக சைவ இலக்கியங்களை வசனநடையில் ஆக்கியமை. இலக்கணத்தை இக்காலத்தவர்களும் இலகுவாக விளங்கும் வண்ணம் நூல்களை ஆக்கியமை. பாடசாலைகள் நிறுவி சைவத்தையும் தமிழ் பண்பாட்டையும் வருங்கால சந்ததியினருக்கு பதியச் செய்தமை. தமிழுக்கென்று நல்லதோர் வசன நடையினை அறிமுகம் செய்து வசனநடை கைவந்த வல்லாளர் ஆகியமை. பாடத்திட்டங்களை ஆக்கி இளையோர் நன்னெறி வழியில் வளர்வதற்கு வழி சமைத்தமை. அச்சுக்கூடங்களை நிறுவி எழுத்துப்பிழை இல்லாமல் தமிழில் நூல்களை அச்சிட்டு வெளியிட்டு சாதனை காட்டியமை.

அஞ்சாமை, தூங்காமை, களங்கங்கண்டு பொறுக்காமை, பொய்மை ஏற்காமை, ஒழுக்கத்தை இழக்காமை, ஆறுமுகநாவலரின் வாழ்க்கை முறையாக அமைந்தது எனலாம். பிரமச்சாரியாகவே வாழ்ந்தார். இல்லறத்தைத் துறந்தார். நல்லறத்தை ஏற்றார். சொல்லிவிட்டு நிற்கவில்லை. சொல்லியபடி வாழ்ந்தும் காட்டினார். அறுபத்து மூன்று நாயன்மாருடன் ஆறுமுகநாவலரையும் இணைக்கும் வழக்கமும் காணப்படுகிறது. சமயகுரவர் நால்வருடன் ஐந்தாங் குரவராக ஆறுமுகநாவலர் அவர்களை ஏற்கும் நிலையும் காணப்படுகிறது. ஆறுமுகநாவலர் அவர்கள் இரண்டு பெரிய குறிக்கோள்களைத் தம் இளம்பருவத்திலே உருவாக்கிக் கொண்டார். தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து வாழவைக்கும் தாய்மொழி வளர்த்தலும், இம்மைக்கும் மறுமைக்கும் பயன்களை நல்கும் சமயத்தைக் காத்தலும் ஆகிய குறிக்கோள்கள் இரண்டுமே எனலாம். இவற்றைத் தவிர வேறெதையும் அவருடைய உள்ளம் இடந்தரவில்லை என்றே கருத முடிகிறது. “தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள். அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதி வரைக் காத்துப் பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்” என்று ஆறுமுகநாவலர் புகன்று நிற்பதுதான் கந்தபுராண கலாசாரத்தை உருவாக்கிட உள்நின்ற சக்தி எனலாம். ஆசியப் பண்பாட்டில் சைவத்தையும் சைவத்தமிழ் இலக்கியங்களையும் காத்து அதற்கென ஒரு தனியான பண்பாடாக “கந்தபுராண கலாசாரம்” விளங்குகிறது என்பதும் அதனை தாங்கி நிற்கும் யாழ்ப்பாணமும் கருத்தில் இருத்தப்பட வேண்டியது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

# ஹயஸ் வாகன விபத்தில் சாரதி பரிதாப உயிரிழப்பு

ஹயஸ் வாகன விபத்தில் சாரதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வெலிக்கந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிக்கந்தை – கட்டுவன்வில வீதியில் அத்துகல பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கட்டுவன்வில நோக்கிச் சென்ற ஹயஸ் வான், வீதியை விட்டு விலகி, கவிழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த வானின் சாரதி, வெலிக்கந்தை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



கட்டுவன்வில, வெலிக்கந்தை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் வெலிக்கந்தை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிக்கந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் -27.10.2025



மேஷம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



ரிஷபம்

இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.



மிதுனம்

உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறிது குறைந்து காணப்படும்.



கடகம்

நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்துகொள்ளுங்கள்.

இன்று உங்கள் லட்சியம் சேமிப்பாக இருக்க வேண்டும். முடிந்த அளவில் சேமிக்க வேண்டும். பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நேர்மறை அணுகுமுறை தேவை.



சிம்மம்

உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.



கன்னி

முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.



துலாம்

உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.

பதட்டத்தை தள்ளி வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.தலைவலி மற்றும் செரிமானம் சம்பந்தமான சிறு பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்



விருச்சிகம்

இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -27.10.2025




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்றுஉங்கள்தேவைகளைபூர்த்திசெய்யும்அளவிற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. பொதுவாக ஆரோக்கியம் எல்லாவிதத்திலும் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். என்றாலும் பதட்டத்தை தவிர்க்க வேண்டும்.




இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும்.உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும். எனவே கவலை வேண்டாம்.

இன்று யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது. பதற்றம் காரணமாக தொடைகளில் வலி காணப்படும்.

# செவ்வந்தியின் விசாரணையில் கிளிநொச்சியில் சிக்கிய கஞ்சா

## பொலிஸாரால் ஒருவர் கைது



கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இஷாரா செவ்வந்தி பதுங்கியிருந்த இடங்கள் மற்றும் அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போதே, பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் சான்றுப்பொருள்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை

முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்களை அரசாங்கம் மாற்றாவிட்டால், அடுத்த ஆண்டு பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கல்விமறுசீரமைப்புகளுக்குஇணங்க, பாடசாலை நடைபெறும் காலத்தை நீடிக்கவும், 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தநிலைமைகளால் மாணவர்கள் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாவார்கள் என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், கல்வி மறுசீரமைப்பு குறித்து அரசாங்கம் தனது தீர்மானங்களை மாற்றாத பட்சத்தில், பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.